# வகுப்பு - 8 - புவியியல், 3. நீரியல் சுழற்சி

**பயிற்சி வினாக்கள்:**

1. நீர் கடலிலிருந்து, வளிமண்டலத்திற்கும், வளிமண்டலத்திலிருந்து நிலத்திற்கும், மீண்டும் நிலத்திலிருந்து கடலுக்குச் செல்லும் முறைக்கு______ என்றுபெயர்.

   1. ஆற்றின் சுழற்சி  2. நீரின் சுழற்சி
   3. பாறைச் சுழற்சி  4. வாழ்க்கைச் சுழற்சி

2. தாவரங்களும், விலங்குகளும் உயிர்வாழ்வதற்கு __________ அத்தியாவசியமானதாகும்.

   1. நீர்  2. உறைபனி  3. பனிக்கட்டி  4. குடாக்கள்

3. புவியின் மேற்பரப்பில் உள்ள நீரின் மொத்த அளவு______.

   1. 61%  2. 70%  3. 71%  4. 81%

4. பொருத்துக:

| நீர் ஆதாரம் | | மொத்த நீரின் சதவீதம் |
|---|---|---|
| i. பேராழிகள், கடல்கள் மற்றும் குடாக்கள் | - | a) 0.001% |
| ii. நிலத்தடி நீர் | - | b) 0.0002% |
| iii. வளிமண்டலம் | - | c) 96.54% |
| iv. ஆறுகள் | - | d) 1.69% |

   1. i - c, ii - a, iii - b, iv - d  2. i - c, ii - d, iii - b, iv - a
   3. i - c, ii - a, iii - b, iv - d  4. i - c, ii - d, iii - a, iv - b

5. புவியில் உள்ள மொத்த நீரில் உவர்ப்பு நீரின் சதவீதம்______.

   1. 97.2%  2. 98.2%  3. 96.2 %  4. 95.2%

6. புவியில் உள்ள நன்னீரின் சதவீதம்______.

LIVEWORKSHEETS

1. 71% 2. 97% 3. 2.8% 4. 0.6%

7. பொருளாதார ரீதியில் நவீன தொழில்நுட்பத்தின் மூலம் துளையிட்டு எடுக்கப்படும் மொத்த நிலத்தடி நீரின் சதவீதம்______.

1. 0.6% 2. 71% 3. 97% 4. 2.8%

8. கூற்று(i): நீர், ஆவியாதல் மூலம் வளிமண்டலத்தின் உயரமான பகுதிகளுக்குச் செல்லும் பொழுது, திரவமாகச் சுருங்குதலின் மூலம் மேகங்களாக மாறுகிறது.

கூற்று(ii): மேகத்தில் உள்ள நீர்த்திவலைகள் உருகுதல் மற்றும் மேகம் உடைதல் காரணமாக பொழிவின் பல்வேறு வடிவங்களில் புவியை வந்தடைகிறது.

1. கூற்று I சரி ii தவறு
2. கூற்று I மற்றும் ii சரி
3. கூற்று I தவறு ii சரி
4. கூற்று I மற்றும் ii தவறு

9. நீரின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய அறிவியல் படிப்பிற்கு______ என்றுபெயர்.

1. பாறைக்கோளம்
2. வாயுக்கோளம்
3. நீரியல்
4. இவற்றில் எதுவுமில்லை

10. நீரியல் சுழற்சிக்கு தேவையான ஆற்றல் எங்கிருந்து கிடைக்கிறது?

1. சூரியன்
2. மின் மையங்கள்
3. தாவரங்கள்
4. விலங்கினங்கள்

11. மேகத்திலிருந்து நிலத்தின் மீது விழும் நீர்த்துளிகளுக்கு______ என்றுபெயர்.

1. ஆவியீர்ப்பு 2. நீர் சுருங்குதல் 3. ஆவியாதல் 4. மழைப்பொழிவு

12. பனிப்பாறைகளில் இருந்து நேரடியாக நீர் ஆவியாவது______ என்று அழைக்கப்படுகிறது.

1. சுருங்குதல்
2. பதங்கமாதல்

LIVEWORKSHEETS

3. மழைப்பொழிவு 4.உட்கசிந்து வெளியேறுதல்

13. நீராவியின் நீர்சுருங்குதல் மூலம் உருவாகும் நீர்த்துளி______ எனப்படுகிறது.

1. மேகங்கள் 2. மழைப்பொழிவு 3. பனி 4. மூடுபனி

14. வளி மண்டலத்தில் உள்ள நீராவியின் அளவு _______ எனப்படும்.

1. பனிப்பொழிவு 2. வெப்ப நீர் 3. ஆவியீர்ப்பு 4. ஈரப்பதம்

15. நீரியல் சுழற்சி______ முக்கிய கூறுகள் உள்ளன.

1. 2 2. 3 3. 4 4. 6

16. திட, திரவ, வாயுநிலையில் இயற்கையாக காணப்படும் ஒரே பொருள்______.

1. ஆக்ஸிஜன் 2. ஹைட்ரஜன் 3. நீர் 4. ஹீலியம்

17. வளிமண்டலத்தில் நீர் எந்த வடிவத்தில் காணப்படுகிறது.?

1. பெருங்கடல்கள் 2. ஆறுகள் 3. மேகங்கள் 4. ஏரிகள்

18. கீழ்க்கண்டவற்றில் எவை பொழிவின் உருவங்கள் ஆகும்.?

1. மழை 2. ஆலங்கட்டி மழை

3. பனி 4. இவையனைத்தும்

19. புவியின் மேற்பரப்பு நீர்நிலைகளில் இருந்து ஆவியாதல் வழியாகவும் மற்றும் தாவரங்களிலிருந்து நீர் உட்கசிந்து வெளியிடுதல் மூலம் நிகழும் புவியின் மொத்த நீர் இழப்பு______.

1. ஆவியீர்ப்பு 2. திரவமாய் சுருங்குதல்

3. பொழிவு 4. நீர் ஊடுருவல்

20. பேராழிகள், கடல்கள், ஏரிகள் மற்றும் ஆறுகள் போன்றவற்றிலிருந்து______% ஈரப்பதம் ஆவியாகிறது.

1. 80% 2. 90% 3. 70% 4. 60%

LIVEWORKSHEETS

21. கூற்று: உலக அளவில் நீர் எவ்வளவு ஆவியாகிறதோ, அதே அளவு பொழிவாக புவிக்கு மீண்டும் கிடைக்கிறது.

காரணம்: புவியியல் ரீதியாக ஆவியாதல் செயல்முறைகள் நடைபெறுவதில்லை. காற்று அதிகமாக உள்ள காலங்களில் ஆவியாதல் விகிதம் குறைவு. காற்று குறைவாக உள்ள காலங்களில் ஆவியாதல் விகிதம் அதிகம்.

1. கூற்று சரி, காரணம் தவறு.
2. கூற்று தவறு ,காரணம் சரி.
3. கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை விளக்குகிறது
4. கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை விளக்கவில்லை

22. கீழ்க்கண்ட வாக்கியத்திற்கு பொருத்தமற்றதைத் தேர்ந்தெடு:

ஆவியாதல் விகிதம் அதிகரித்தலானது,

1. காற்றின் வேகம் அதிகரிக்கும் பொழுது
2. வெப்பநிலை அதிகரிக்கும் பொழுது
3. ஈரப்பதம் குறையும் பொழுது
4. பூமியில் நீர்நிலைகள் அதிகரிக்காத பொழுது

23. நீரியல் சுழற்சி ________ நிலைகளில் நடைபெறுகிறது?

1. நீர் வழிந்தோடல்
2. நீர் உட்கசிந்து வெளியிடுதல்
3. ஆவியீர்ப்பு
4. இவை மூன்றும்

24. கீழ்க்காணும் எந்த வளத்தின் மூலம் தாவரங்களின் வேர்களுக்கு நீரை செலுத்துகின்றன?

1. கனிம வளம்
2. நீர் வளம்
3. மண் வளம்
4. உயிர் வளம்

25. நீராவி, நீராக மாறும் செயல்முறைக்கு________ என்று பெயர்.

1. நீர் சுருங்குதல்
2. நீர் விரிவடைதல்
3. நீர் ஊடுருவல்
4. நீர் உட்கசிதல்

LIVEWORKSHEETS

26. நீர்த்துளிகள் புவியின் மேற்பரப்பில் குளிர்ந்த பொருள்களின் மீது படும்பொழுது _______ உருவாகிறது.

1. உறைபனி 2. பனித்துளி 3. அடர் மூடுபனி 4. மூடுபனி

27. சரியான இணையை தேர்ந்தெடுக்க.

1. நீர் சுருங்குதல் - ஆவியாதலின் நேர்வினை
2. நீர் சுருங்குதல் - ஆவியாதலின் எதிர்வினை
3. நீர் உட்கசிந்து வெளியிடுதல் - நீர் சுருங்குதல்
4. நீர்த்துளிகள் - ஆவியாதலின் நேர்வினை

28. குளிர்ந்த பொருட்களின் மேற்பரப்புகளின் மீது நீராவி படிந்து பனிப்படிகங்களாக மாறுவதையே_______ என்கிறோம்.

1. உறைபனி 2. பனி 3. மூடுபனி 4. அடர் மூடுபனி

29. காற்றில் இருக்கும் நீர் சுருங்குதலால் செறிவூட்டப்பட்ட மிக நுண்ணிய நீர்த்துளிகளே_______ எனப்படும்.

1. உறைபனி 2. பனி 3. மூடுபனி 4. அடர் மூடுபனி

30. காற்றடுக்கில் அடர் மூடுபனி எந்த வகையான போக்குவரத்துக்கு உகந்தது? அதன் உயரம் என்ன?

1. ரயில் போக்குவரத்து (50 km) 2. விமான போக்குவரத்து (10 km)
3. விமான போக்குவரத்து (15 km) 4. ரயில் போக்குவரத்து (40 km)

31. காற்றில் தொங்கும் நிலையில் மிதக்கும் நுண்ணிய நீர்த்துளிகளையே_______ என்கிறோம்.

1. மூடுபனி 2. அடர் மூடுபனி 3. உறைபனி 4. பனி

LIVEWORKSHEETS

32. காற்றில் உள்ள நீராவி விரைவாகக் குளிர்வதால் பார்வைக்குத் தெரியாத வாயுநிலையிலிருந்து பார்வைக்குப் புலனாகும் நீர்த்துளிகளாக மாறுவது______.

1. பனி 2. மூடுபனி 3. அடர் மூடுபனி 4. உறைபனி

33. வளிமண்டலத்தில் காணப்படும் குறைந்த எடை கொண்ட மிக நுண்ணிய நீர்த்துளிகள் மற்றும் பனிப்படிகங்களைக் கொண்டது______.

1. பனி 2. மூடுபனி 3. மேகங்கள் 4. உறைபனி

34. மேகங்களில் காணப்படும் நீர்த்துளிகளின் அளவானது______ மைக்ரான் முதல்______ மைக்ரான் கொண்டது.

1. 2 முதல் 90 2. 2 முதல் 80 3. 2 முதல் 100 4. 2 முதல் 110

35. வளிமண்டலத்தில் உள்ள மேகங்களிலிருந்து பல்வேறு வடிவங்களில் நீராக புவியின் மேற்பரப்பை வந்தடைவது______.

1. மழைப்பொழிவு 2. மேகங்கள்
3. கார்திரள் மேகம் 4. படைத்திரள் மேகங்கள்

LIVEWORKSHEETS